முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004 c/w OS.31/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 29.04.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 29.04.2026 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர். | A.C.P.ரத்தினசுப்பிரமணியன் | வயது.. | 57 |
| தந்தை பெயர். | A.C.பழனியாண்டி | ஊர்.. | புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1, 11 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ..**

1. வா.சா.ஆ.62 விடுதலை பத்திரம் 25.02.2026 -இல் மனு செய்து பெற்றேன் என்றால் சரிதான். வாங்கியவுடனே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அப்போது குறுக்கு விசாரணை நடந்துக்கொண்டிருந்தது. பிரதிவாதி தரப்பு சாட்சியம் விசாரிக்கும் போது வா.சா.ஆ.62 புவனகிரி பதிவு அலுவலகத்தில் பதிவு நகல் கோரி விண்ணப்பம் செய்து பெற்ற நகலை தன் முதல் விசாரணையில் தாக்கல் செய்த போது எங்கள் தரப்பில் குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை செய்ததால் குறியீடு செய்யப்படவில்லை என்றால் எனக்கு அப்போது நகல் தான் கொடுத்தார்கள். வழக்கு சொத்தின் கிரைய பத்திரத்தில் உற்சவம் நடத்தப்படவேண்டும் என்ற நிபந்தனை இல்லை என்றால் சரிதான், ஆனால் அன்றைய புவனகிரி வர்த்த சங்க தீர்மானத்தில் உற்சவம் நடத்தப்படவேண்டும் என்று 06.03.1944 இல் தீர்மானம் போடப்பட்டது கிரையம் வாங்குவதற்கான தீர்மானத்தில் உற்சவம் நடத்தப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்சொன்ன தீர்மானத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். அது வா.சா.ஆ. 4 ஆகும். சங்கத்தின் செலவில் நடத்தவேண்டும் என்று இருக்கிறது வெளிப்படையாக கிரய சொத்தின் வருமானத்தில் உற்சவம் நடத்தப்படவேண்டும் என்று இல்லை. வா.சா.ஆ.63 சுற்றறிக்கையில் இல்லை. மீண்டும் சாட்சி சுற்றறிக்கையில் சொத்து வாங்குவதற்காகவும், உற்வசம் நடத்துவதற்காகவும் அறிவிப்பு உள்ளதாக இருக்கிறது.

2. வா.சா.ஆ. 62 விடுதலை பத்திரம் ஜெயராம நாயுடு, பத்மநாப நாயுடு அண்ணன் தம்பிக்குள் ஏற்பட்டதாகும், ஸ்ரீ முஷ்ணம் பூவராக சாமி மண்டக படியினை ஆண்டு தோறும் பரம்பரையாக நடத்தி வந்தோம் தற்போது அதில் ஒருவரே பொருப்பு எடுத்த வேண்டும் என்று பத்பநாக நாயுடு தனது உரிமையை ரூ.50 பெற்றுக்கொண்டு அண்ணன் ஜெயராம நாயுடுக்கு விட்டு கொடுத்ததாகவும் உள்ளது தேவைப்பட்டால் விற்பனை செய்யவோ, விற்பனை செய்த தொகையை கொண்டு ஆண்டு தோறும் தர்மகாரியத்தை செய்து வரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 62 விடுதலையை அனுசரித்து கிரய பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட வில்லை என்றால் சரியல்ல. சங்கத்தின் மூலம் கிரயம் பெறப்பட்டது விடுதலை பெற்ற நபரிடம் இருந்து வாங்கவில்லை என்றால் சரிதான், ஜெயராம நாயுடு நேரடியாக கிரயம் கொடுக்கவில்லை, ஜெயராம நாயுடு வேர்ஒரு நபருக்கு கிரயம் கொடுத்து அதன் மூலமாக சங்கத்தின் சார்பாக கிரயம் பெறப்பட்டது.

3. சங்கம் மூலமாக கிரயம் பெற்றபோது அதற்கான மூல பத்திரத்தை நாங்கள் பெறவில்லை என்றால் சரியல்ல, அப்போது இருந்து A.C நடராஜ முதலியார் அவர்கள் அந்த மூலபத்திரங்களையும் கிரயபத்திரங்களையும் தனக்கு பிறகு வந்த தலைவர்களிடம் ஒப்படைத்து ரங்கநாதபிள்ளை தலைவராக இருந்த காலத்தில் அவர்வசம் இருந்தது ரங்கநாதபிள்ளை அடுத்த தலைவரிடம் ஒப்படைக்கவில்லை. நடராஜ முதலியாரால் பெற்றப்பட்ட மூலப்பத்திரம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான், ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தர்மத்தின் விபரம் விடுதலை பத்திரத்தில் தான் உள்ளது அதனால் அது தாக்கல் செய்யப்பட்டது. நடராஜமுதலியாரிடம் கிரயம் கொடுத்த நபர் எந்த நிபந்தனையும் போடவில்லை என்றால் நான் அந்த ஆவணத்தை பார்த்தது இல்லை. உற்சவம் தொடரச்சியாக நடத்தப்படுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் வரிசையாக ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை விடுதலை பத்திரம் மட்டும் தாக்கல் செய்துள்ளோம்.

4. விடுதலை கொடுத்தவர் பத்மநாப நாயுடு, விடுதலை பெற்றவர் ஜெயராம நாயுடு, ஜெயராம நாயுடு தான் கிரயம் கொடுக்கும் போது உற்சவம் நடத்தவேண்டும் என்று கிரயப்பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் அந்த கிரய பத்திரத்தை நான் பார்க்கவில்லை. எனக்கு பாதகமாக இருப்பதால் நான் பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 62 விடுதலை பத்திரத்தின் படி

எனக்கு சாதகமாக இருப்பதற்காக மட்டும் வா.சா.ஆ. 62 தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும், பாதகமான ஆவணங்களை மறைத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.63 OS.15/1985, மாண்புமிகு சிதம்பரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்து அந்த வழக்கு முடிந்த பிறகு return of document மூலம் பெற்ற பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ. 63, தாக்கல் செய்ததற்காகவே ஸ்ரீராம அட்சகத்தை அடித்து உடைத்து printing press மற்றும் கட்டிடத்தை நாசப்படுத்தி ஆவணங்களை திருடி செய்த வகையில் கிடைத்த ஆவணங்களில் ஒன்று என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 63 மாதாந்திர கூட்டத்திற்கான சுற்றறிக்கை என்றால் சரியல்ல, மாதாந்திர கூட்டம், அவசர கூட்டம், general body கூட்டம் அனைத்திற்குமானது தான். மாதாமாதத்திற்கு கூட்டப்படும் circular என்றால் சரிதான்.

5. circular கொடுத்தப்பிறகு கூட்டம் கூட்டப்படும் என்றால் சரிதான். circular அனுப்பப்பட்டு அந்த நபர்களின் கையொப்பம் பெறப்பட்டு அதன் பின்னர் கூட்டம் கூட்டப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ. 63 இல் மூன்று இடத்தில் General body meeting -ற்கு circular அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் 3 general body meeting இருக்கிறதா என்று நான் சரிபார்க்கவேண்டும். 06.03.1944 சுற்றறிக்கையில் பூவராக சாமி மண்டபம் விலைக்கு வாங்குவதற்கு தீர்மானிப்பதற்கு கூட்டம் கூட்டப்பட்டது என்றால் சரிதான், மேலும் பூவராக சாமி கடைதெரு விழா நடத்துவதற்காகவும் கூட்டம் கூட்டப்பட்டது என்றால் சரிதான் அது அவசர கூட்டம் என்றாலும் சரிதான். 28.03.1944 இல் அனுப்பிய circular general body meeting வழக்கமாக கூட்டம் கூட்டப்படும் இடத்தில் நடத்துவதற்காக அனுப்பப்பட்ட circular என்றால் சரிதான். அதனை அனுசரித்து 3.4.1944 இல் கூட்டம் நடத்துவதற்கு circular அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

6. 21.09.1944 சங்க கட்டிடம் புதுப்பித்தல் சம்மந்தமாக தீர்மானிப்பதற்கு அனுப்பப்பட்ட Circular என்றால் சரிதான். 15.11.1944 இல் முதல் முறையாக நிர்வாக கமிட்டிகூட்டம் சங்க கட்டிடத்தில் கிரயம் பெற்ற பிறகு முதலாவதாக நடத்தப்பட்டதாகும். அதன் பிறகு சங்க கட்டிடத்தில் கூட்டங்கள் கூட்டப்பட்டது என்றால் சரிதான். 13.03.1945 இல் general body meeting சம்மந்தமாக நிர்வாக கமிட்டி சார்பாக circular அனுப்பப்பட்டது என்றால் சரிதான். circular அனுப்பிதான் 10.9.1949 வரை கூட்டங்கள் நடத்தப்பட்டதாக ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான்.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.